காலியிடத்தில் சரியான சொல்லை எழுதி கதையை நிறைவு செய்க.

## இனிய நினைவுகள்

அன்று என் தோழி செம்மலரின் பிறந்தநாள். செம்மலர் முதியோர் இல்லத்தில் ____________________ எனத் திட்டமிட்டாள். செம்மலர் அவளின் நண்பர்களையும் உறவினர்களையும் அழைத்து சென்றாள். நாங்கள் காலை ஒன்பது மணி முதியோர் ________________ வந்தடைந்தோம்.

நாங்கள் முதியோர் இல்லத்தைச் ________________செய்தோம். முதியோர்கள் முகமலர்ச்சியுடன் செம்மலருக்கு வாழ்த்து கூறினர். செம்மலரின் உறவினர்கள் பலவிதமான __________________ எடுத்து மேசையில் அடுக்கி வைத்தனர். அங்கிருந்த முதியோர்கள் ________________________ மறந்து கலகலப்பாக இருந்தனர்.

செம்மலர் அவளது பிறந்தநாள் ____________________ வெட்டினாள். அவள் சிறு துண்டாக எடுத்து அங்கிருந்த முதியோர்களுக்கு ஊட்டினாள். பின்னர், செம்மலருடன் வந்திருந்த அனைவரும் முதியோர்களுடன் ____________________ மகிழ்ந்தோம்.. சில முதியோர்கள் செம்மலருக்கும் அவளது நண்பர்களுக்கும் கதைகள் பல கூறினார்கள். மேலும் சிலர் _____________________ கூறி மகிழ்ந்தனர். நான் விடை தெரியாமல் திக்குமுக்காடிப் போனேன்.

மாலை ஆறு மணி ஆனதும் நானும் செம்மலருடன் வந்திருந்த அனைவரும் தங்கள் இல்லத்திற்குத் _______________. செம்மலருக்கு இந்த பிறந்தநாள் விழா பசுமரத்தாணி போல _____________ முடியாத நாளாக அமைந்தது.

| | | | |
|---|---|---|---|
| அணிச்சலை | கொண்டாடலாம் | இல்லத்திற்கு | மறக்க |
| ஆடிப்பாடி | சுத்தம் | பலகாரங்களை | சோகங்களை |
| விடுகதைகள் | திரும்பினோம் | | |

LIVEWORKSHEETS
LIVEWORKSHEETS